மின்னஞ்சல் மூலம்

சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்,சென்னை-08

ந.க.எண். 7838 / அ6 /2023. நாள். 07.10.2023

| | | |
|---|---|---|
| பொருள் | | தமிழ் வளர்ச்சித் துறை - 2023-24 நிதியாண்டில் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக 10.10.2023 அன்று சென்னை மாவட்ட அனைத்து வகை பள்ளி மாணவர்களுக்கு பேச்சு போட்டிகள் நடத்துதல் - மாணவர்களை கலந்து கொள்ள தக்க நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவித்தல் - சார்பு |
| பார்வை | | சென்னை-08, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் ஆ,மொ.4/8961/2023, நாள் 21.09.2023 |

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காணும் சென்னை-08 தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் அவர்களின் செயல்முறைக்கு இணங்க தமிழ் வளர்ச்சித் துறையில் 2021-2022 ஆம் கல்வியாண்டிற்கான மானிய கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க நாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி ,ஜவஹர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா. முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துக்களையும் சமூக சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டு தோறும் அவர்களது பிறந்தநாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டிகள் நடத்திப் பரிசு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் போட்டிகள் நடத்தி பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது .

தமிழ் வளர்ச்சித் துறை - 2023-24 ம் நிதியாண்டில் அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக 10.10.2023 ( செவ்வாய்கிழமை ) அன்று அனைத்து வகை பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டிகள், மாவட்ட அளவில் கீழ்கண்ட மூன்று மையங்களில் நடைபெற உள்ளன, ஒரு போட்டிக்கு ஒரு மாணாக்கர் என்ற முறையில் , பள்ளியிலிருந்து, பேச்சுப்போட்டியில் சிறந்த ஆற்றல் மிக்க ஒரு மாணாக்கரை தேர்ந்தெடுத்து போட்டியில் பங்கேற்க சார்ந்த மையத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்து மாறும் சார்ந்த மாவட்டக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

Scanned with OKEN Scanner

| வ எண் | போட்டி நடத்தும் மையத்தின் பெயர் | போட்டி நடைபெறும் நாள் | போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டிய பள்ளி வகைகள் |
|---|---|---|---|
| 1 | அரசு மேல்நிலைப்பள்ளி சிட்கோநகர் வில்லிவாக்கம்,சென்னை -49 | 10.10.2023 | வட சென்னை கல்வி மாவட்டம், சார்ந்த அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மட்டும் |
| 2 | அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி நந்தனம் சென்னை 15 | 10.10.2023 | தென் சென்னை கல்வி மாவட்டம், சார்ந்த அரசு /அரசுநிதி உதவி பெறும் பள்ளிகள் மட்டும் |
| 3 | சீமாட்டி லேடிவிலிங்டன் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி திருவல்லிக்கேணி-05 | 10.10.2023 | அனைத்து ,சென்னை பள்ளிகள் ,மற்றும் தனியார் பள்ளிகள் மட்டும் |

மேலும் இப்பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் மாணவ/மாணவிகளுக்கு முதல் பரிசு ரூ 5000/ இரண்டாம் பரிசு 3000/ , மூன்றாம் பரிசு 2000/ வழங்கப்படும் மேலும் இப் போட்டியில் பங்கேற்று வெற்றி பெறும் அரசு பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு பரிசு ரூ.2000/ , மற்றும் சான்றிதழும் இரண்டு மாணவருக்கும் , வழங்கப்படும்

## போட்டிக்கானதலைப்புகள்

| அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் பேச்சுப்போட்டிக்கான தலைப்புகள் (போட்டி நடைபெறும் நாள் 10 . 10 . 2023 ) | |
|---|---|
| 1 | காந்தியடிகள் நடத்திய தண்டியாத்திரை |
| 2 | வெள்ளையனே வெளியேறு |
| 3 | சத்திய சோதனை |
| 4 | மதுரையில் காந்தி |

மேற்கண்ட தலைப்புகளில் மட்டுமே போட்டிகள் நடைப்பெறும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் போட்டிகள் நடைப்பெறும் மையங்களாக அறிவிக்கப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் , போட்டியை நடத்துவதற்காக வருகை புரியும் தமிழ்வளர்ச்சி துறை அலுவலர்களுக்கு போட்டிகள் நடைப்பெறும் நாளன்று உரிய ஏற்பாடுகள் செய்து கொடுத்து எந்த ஒரு புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் போட்டியினை நடத்திட சார்ந்த தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்டுகிறது,

Scanned with OKEN Scanner

## பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி விதிமுறைகள்

| | |
|---|---|
| 1 | பேச்சுப் போட்டியில் பங்கேற்கும் மாணவ மாணவிகள் போட்டி நடைபெறும் நாள் அன்று காலை 9 மணி அளவில் அவர்களின் வருகையை பதிவு செய்து உறுதி செய்திட வேண்டும் போட்டி காலை 10 மணி அளவில் போட்டி தொடங்கப்படும் |
| 2 | பேச்சுப் போட்டியில் பங்கேற்கும் மாணவ மாணவிகள் தங்கள் பயிலும் பள்ளி தலைமை ஆசிரியரியரின் பரிந்துரை கடிதம் பெற்று வந்தால் மட்டுமே போட்டியில் பங்கேற்க முடியும் |
| 3 | பள்ளி மாணவ மாணவிகளை பள்ளி ஆசிரியர் ஒருவரை நியமித்து அவருடன் போட்டிக்கு அனுப்பி வைக்க வேண்டும் , தனியாக மாணவ மாணவிகளை அனுப்புதல் கூடாது மாணவ மாணவியர் பாதுகாப்பாக அழைத்து வருபவர்களின் மதிய உணவுக்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் |
| 4 | பள்ளி மாணவ மாணவியர் பள்ளி சீருடைகள் வந்தால் மட்டுமே போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர் |
| 5 | போட்டியில் பேசுவதற்கு ஒருவருக்கு மூன்று நிமிடங்கள் மட்டுமே அளிக்கப்படும் மாணவர்களுக்கு மதிப்பெண் அளிப்பதில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது |
| 6 | போட்டிக்கான தலைப்புகள் முன்கூட்டியே பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் |
| 7 | மேலும் பேச்சு போட்டி நாளன்று மாணவர்களுக்கு போட்டிகளில் தலைப்புகள் படித்து காண்பிக்கப்படும் |
| 8 | பேச்சுப் போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பெற்ற அனைத்து தலைப்புகளிலும் பேசுவதற்கு உரிய தயாரிப்புடன் வர வேண்டும் |
| 9 | பேச்சுப் போட்டியில் பங்கேற்கும் மாணவர்களுக்கு குலுக்கல் சீட்டு முறையில் தலைப்பு வழங்கப்படும் அச்சீட்டில் வரும் தலைப்பில் மட்டுமே மாணவ மாணவியர் பேசுவதற்கு அனுமதிக்கப்படுவர் |
| 10 | போட்டித் தொடங்கிய பின் வரும் மாணவ மாணவிகள் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் |

முதன்மைக் கல்வி அலுவலர்
07/10/23 சென்னை

பெறுநர்

1 கல்வி அலுவலர் (பெரு நகர சென்னை மாநகராட்சி)

2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் ,சென்னை மாவட்டம் .

3. சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள், தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது .

நகல்

1 சென்னை -06 பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது

2 சென்னை -8 , தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது

,

Scanned with OKEN Scanner